# வடக்கு மாகாண பொதுச்சேவையின் நூலகர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2017

வடக்கு மாகாண பொதுச்சேவையின் நூலகர் சேவை தரம் III இல் காணப்படும் ***37*** பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2017 யூலை மாதம்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி ***16.06.2017*** ஆகும்.

## 02 ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 2013.01.01 ஆம் திகதியிலிருந்து செயல் வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட நூலகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30** ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் குறித்த பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 இப் பரீட்சையில் சித்திபெற்ற பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து மூன்று வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மாகாண நூலகர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீடசையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

02.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது 05 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

02.5 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **37** ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய நியமன அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 03 சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2016** க்கு ஏற்ப நூலகர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **31, 040 – 10 x 445 - 11 x 660 - 10 x 730 – 10 x 750 – 57, 550/-** ஆகும். (ரூபா 31,930 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

## 04 பொதுவாக தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலினை சமர்ப்பித்தல் வேண்டும்)

04.3 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.4 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் **சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

04.5 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று **18 வயதிற்கு குறையாதவராகவும், 40 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## 05 கல்வித் தகைமைகள் :-

### 05.1 நுலகர் சேவை தரம் III இற்கான திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்

(அ) (i) க. பொ. த. (சா. த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளுள் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

(ii) க. பொ. த. (சா. த) பரீட்சையில் கணிதம் அடங்கலாக வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்திபெற்றிருத்தல். இவற்றுள் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ. த. (உ. த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் பற்றிய மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறியினை சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ii) இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

### 05.2 நூலகர் தரம் III இற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்

(அ) மாகாண அரச சேவையின் / அரச சேவையின், நூலக உதவியாளர் / நூலக ஊழியர் பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தலும், அப்பதவியில் 10 வருட முனைப்பான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தலும், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலத்திற்கு திருப்திகரமாக சேவையாற்றி இருத்தலும் வேண்டும். (இதற்காக உச்ச வயதெல்லை வலுப்பட மாட்டாது)

**அத்துடன்**

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நூலகவியல் பற்றிய மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறியொன்றின் முதலாம் ஆண்டில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ii) இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று வருட கால டிப்ளோமா பாட நெறியில் முதலாம் ஆண்டில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

## 06 ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

*06.3* **நிலவும் வெற்றிடத்தின் 30%** மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமாக நிரப்பப்படும்.

*06.4* வெற்றிடத்தின் 03% மாற்றுத்திறனாளிகளுக்காக (வலது குறைந்தோர்) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது (வலது குறைவானது) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

## 07 பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா ***500.00*** ஐ **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **"3401"** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08 விண்ணப்பிக்கும் முறை :-

*08.1* இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 11.1 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **16.06.2017** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

*08.2* விண்ணப்பப்படிவத்தில் 01 இன் கீழ் விண்ணப்பதாரியின் பெயரைக் குறிப்பிடும் போது முழுப்பெயரின் இறுதியிலிருக்கும் பெயரை முதலில் எழுதி பெயரிலிருக்கும் அனைத்து பெயர் முதலெழுத்துக்களையும் பெயரின் பின்னால் குறிப்பிடவேண்டும்.
**உதாரணம்**:- விண்ணப்பப்படிவத்தின் 01 இல் SIVAKUMAR.K.S எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*08.3* அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**வடக்கு மாகாண பொதுச்சேவையின் நூலகர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2017"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

*08.4* இரு போட்டிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிப்பவர், இவ்விரு போட்டிப் பரீட்சைகளுக்கும் என தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். பரீட்சைக் கட்டணங்களும் தனித்தனியே செலுத்துதல் வேண்டும்.

*08.5* விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

*08.6* விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல – ***021 221 9939***, தொலைநகல் இல - ***021 221 9940***)

**குறிப்பு :-**
கோரிக்கைக் கடிதம், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி, விண்ணப்பப் படிவத்தின் பிரதி, விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## 09 ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 10 பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பரதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## *11 பரீட்சைத் திட்டம் :-*

*இப் பரீட்சை கீழ்க் குறிப்பிட்டவாறான வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.*

### *11.1 நூலகர் சேவையின் தரம் III இற்கான திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்*

| இல | வினாப் பத்திரம் | நேரம் | புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நூலகவியல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02 | பொது உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 03 | பொதுஅறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |

#### *11.1.1 பாடவிதானம்*

***01. நூலகவியல் :***

***(1) நூலகங்களும் நூலகத்துவமும் :-***

*(அ) நூலகங்களும் நூலகத்தின் வரலாறும், நவீன மற்றும் புராதன உலகத்தின் பிரதான நூலகங்கள்.*

*(ஆ) எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்களானதுமான எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும், பரிணாம வளர்ச்சியும்.*

*(இ) அச்சிடற்றொழில் நுட்பத்தின் ஆரம்பமும் விரிவாக்கமும், சமுக அபிவிருத்தி விடயங்களில் நூலகங்களின் பங்களிப்பும்.*

*(ஈ) நூல் நிலைய வகைகள் :-*

(i) விசேட நூலகங்கள்
அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்களில் நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்கள் போன்றவற்றின் கட்டமைப்பு, தொழிற்பாடு மற்றும் நூலக சேவைகள்.

(ii) கல்விசார் நூலகங்கள்
பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூல் நிலையங்களின் கட்டமைப்பும், தொழிற்பாடும் மற்றும் நூலக சேவைகளும்.

(iii) பாடசாலை நூலகங்கள்

(iv) பொது நூலகங்கள்

(v) பிரிவென நூலகங்கள் மற்றும் துறவிமட / சமய நிறுவனங்களின் நூலகங்கள்.

*(உ) நூலகக் குழுக்களின் கட்டமைப்பு, தேவைப்பாடு மற்றும் அதன் பணிகள்.*

(ஊ) நூலக தொழிலுக்குரிய கற்றறிந்தோர் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் (இலங்கை, இந்தியா, அமெரிக்கா, மற்றும் பிரித்தானியா).

(எ) நூல் நிலையக்கட்டிடங்கள் :-
திட்டமிடலில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள். தற்போதுள்ள கட்டடமொன்றில் நூலகம் ஒன்றை தாபித்தல், அமைத்தல் அல்லது மேம்படுத்தலில் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

(ஏ)நூலகப் பொருட்களைப் பராமரித்தல் பேணிப்பாதுகாத்தல். (Conservation) மற்றும் காப்பீடு (Preservation).

(ஐ) இடர்களும் (Disasters) மற்றும் இடர்முகாமைத்துவமும் (Disaster Management).

***(2) அறிவையும் தகவல்களினையும் ஒழுங்கமைத்தல் :-***

(அ) நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் நன்மைகளும்.

(ஆ) இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத்திட்டங்கள் தசமதான (Decimal) பகுப்பாக்கத் திட்டங்கள், சர்வதேச தசமதான (Decimal) பகுப்பாக்கத் திட்டம்.

(இ) நூலக பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்கல் சட்டக்கோவை (A. A. C. R.) முறையும்.

(ஈ) நூல்களைப் பற்றிய விவரங்கள்.

(உ) (அ. அ. ப. வி.) (A. A. C. R.) விதிமுறைகளைப் பயன்படுத்தி பதிவுப்பட்டியல் தயாரித்தல்.

***(3) நூல் நிலைய வளங்களும் தகவல் சேவையும் :-***

(அ) பலவகையான நூலக வளங்கள்.

(ஆ) சேர்ந்த அபிவிருத்தி, சேர்ந்த அபிவிருத்தி கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவமும்.

(இ) நூலக வளங்களை தெரிவு செய்தல் அடங்கலான ஏற்பு செயற்பாடுகள் :-
- I. நூலக வளங்களை தெரிவு செய்தலின் கோட்பாடுகளும் மூலகங்களும்.
- II. ஏற்பு செயற்பாடுகள், தளக்கோளம் உட்பட பல்வகையான தொழில்நுட்பச் சேவைகள்.
- III. இருப்புக்களை மீளாய்தலும் அகற்றும் செயற்பாடும்.

(ஈ) வெளியீடு வெளியீட்டு உரிமையும், தடையும்.

(உ) நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள்.

(ஊ) வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்.

(எ) மக்கள் தொடர்பும் நூலகங்களுக்கான பிரசாரங்களும்.

***(4) தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (Information Communication Technology) :-***

நூலகங்களில் கணனிகளை பயன்படுத்தலும், நூலக நடவடிக்கைகளின் போது தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவமும் உற்பத்திப்பெருக்கமும்.

***(02) பொது உளச்சார்பு :-***
சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்தி கூர்மையையும் அளவிடுவது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

***(03) பொது அறிவு :-***
தேசிய பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதாரம் அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத்துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பெழுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

**11.2 நூலகர் சேவையின் தரம் III இற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்தல்**

| இல | வினாப் பத்திரம் | நேரம் | புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நூலகவியல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02 | பொது உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 03 | பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**11.2.1 பாடவிதானம்**

**(01) நூலகவியல் :-**

**(1) நூலகங்களும் நூலகத்துவமும்**

(அ) நூலகங்களும் நூலக வரலாறும்.

(ஆ) வாசிப்பாளர் சேவைகள்.

(இ) நூல்களதும் பல்வேறுபட்ட ஆவணங்களதும் அச்சிடப்படாத ஊடகங்களதும் ஆரம்பமும் விஸ்தரிப்பும்.

(ஈ) கற்றறிந்த தொழில்சார் சங்கங்கள்.
(i) இலங்கை நூலக சங்கம்.
(ii) அமெரிக்கா, பிரித்தானிய நூலகச் சங்கம்.

(உ) நூலக வகைகள்.
(i) பாடசாலைகளினதும் கல்வி நிறுவனங்களினதும் நூலகங்கள்.
(ii) அரச அமைச்சுக்களினதும் மற்றும் நிறுவனங்களுனதும் நூலகங்கள்.
(iii) பொது நூலகங்கள்.
(iv) உள்ளூராட்சி நிறுவனங்களின் நூல்நிலையங்கள்.

(ஊ) நூலகக்குழுக்கள்.

(எ) பேணிப்பாதுகாத்தலும் (Corservation) காப்பீடும் (Preservation)

**(2) அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும்**

(அ) நூல்களை வகைப்படுத்தலும் நோக்கங்களும் அதன் நன்மைகளும்.

(ஆ) நூல்களை வகைப்படுத்தலின் அடிப்படை அம்சங்கள்.

(இ) தூயி தசமதான (Dewey Decimal) பகுப்பாக்கத் திட்டம்.

(ஈ) பட்டியலாக்கமும், அதன் நோக்கங்களும்.

(உ) AACR 2 பட்டியலாக்க சட்டக்கோவை.

(ஊ) பதிவுகளும் நூல்களைப் பற்றிய விவரங்களும்.

(எ) பட்டியலாக்கத்தின் வகைகள்.

**(3) நூலக வளங்களும், தகவல் சேவைகளும்**

(அ) பல்லின நூலக வளங்கள்.

(ஆ) நூலக வளங்களைத் தெரிவு செய்தலும் தெரிவு செய்யும் செயற்பாடும்.

(இ) ஏற்பும் ஏற்புச் செயற்பாடுகளும்.

(ஈ) தளக்கோள வடிமைப்பு.

(உ) இருப்பு மீளாய்வும் அகற்றுதல் செயற்பாடும்.

**(4) தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்கள்** (Information Communication Technology)
நூல் நிலையங்கள் மீதான கணனித் தொழில் நுட்பத்தின் செயல்விளைவுகள்

***(02)* பொது உளச்சார்பு** :-
சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்தி கூர்மையையும் அளவிடுவது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

***(03)* பொது அறிவு** :-
தேசிய பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதாரம் அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத்துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பெழுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

**குறிப்பு** :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதம் (40 %) ஆவது பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கிலேயே ( Merit Order) நியமனம் வழங்கப்படும்.

***12.*** **பரீட்சைப் பெறுபேறுகள்** :-

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

***13.*** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**ரூ.வரதலிங்கம்.**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**